DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 242/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : அருள்ராஜ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.03.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th March 2026.

**எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதின்றம் சாட்சி தானாக அளிக்கும் சாட்சியத்தை பதிவுசெய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது விருப்பஓய்வு பெற்றுவிட்டேன். நான் திருநெல்வேலி மாவட்ட துப்பறியும் மோப்பநாய் பிரிவில் காவலராக பணிபுரிந்தபோது, கடந்த 26.06.2017 ம் தேதி காலை 7.20 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற உத்தரவின்பேரில் 7.30 மணிக்கு நானும், தலைமைக்காவலர் நாகராஜன் என்பவரும் மோப்பநாய் ரிக்கியை எடுத்துக்கொண்டு காவல்துறை வாகனத்தில் புறப்பட்டு சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையக்குற்ற எண்.99/2017 வழக்கின் சம்பவ இ டத்திற்கு காலை 8.50 மணிக்கு சென்று சம்பவ இடத்தில் கிடைத்த தடயங்களில் மோப்பநாய் ரிக்கி மோப்பம் பிடித்து சம்பவ இடம் மற்றும் வீடு முழுவதும் சுற்றிவந்தது. அதன்பிறகு மோப்பநாய் ரிக்கி வீட்டிற்கு வெளியே தெற்காக ஓடிச்சென்று திருப்பூர் குமரன் ரயில்வே கிராஸிங்கை கடந்து ரயில்வேபீடர் ரோட்டை

அடைந்து தெற்குபக்கம் உள்ள டாஸ்மாக் அருகில் சென்று மோப்பமிட்டது. அதன் பின்பு அங்கிருந்து மேற்காக ரிக்கி ஓடிசென்று ரயில்வேஸ்டேசன் அருகில் உள்ள இருசக்கரவாகனம் மற்றும் ஆட்டோ நிறுத்தும் இடம் சுற்றிலும் மோப்பமிட்டு ரிக்கி நின்றுவிட்டது. இது சம்பந்தமாக நான் அறிக்கை அளித்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை நேரடியாக விசாரித்தாரா அல்லது தொலைபேசி மூலமாக விசாரித்தாரா என்றால் தொலைபேசி மூலம் விசாரித்தார். நான் முதல்விசாரணையில் கூறிய மோப்பநாய் ரிக்கியின் செயல்பாடுகள் காணொளியாக படம் பிடிக்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் கூறியவாறு மோப்பநாய் ரிக்கியை பயன்படுத்தி சம்பவ இடத்தை ஆய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. மோப்பநாய் ரிக்கியை பயன்படுத்தி சம்பவ இடத்தை ஆய்வு செய்தது பற்றி நான் தயாரித்ததாக முதல்விசாரணையில் கூறியுள்ள அறிக்கையை ஆய்வாளரிடம் சமர்ப்பித்தேனா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி அறிக்கையை எனது மேலதிகாரியிடம் சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. அந்த அறிக்கை திருநெல்வேலி மாவட்ட துப்பறியும் மோப்பநாய் பிரிவு அலுவலகத்தில் உள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 242/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : திரு.நாகராஜன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.03.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 5th March 2026.

**எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதின்றம் சாட்சி தானாக அளிக்கும் சாட்சியத்தை பதிவுசெய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் திருநெல்வேலி மாவட்ட துப்பறியும் மோப்பநாய் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் திருநெல்வேலி மாவட்ட துப்பறியும் மோப்பநாய் பிரிவில் காவலராக பணிபுரிந்தபோது, கடந்த 26.06.2017 ம் தேதி காலை 7.20 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற உத்தரவின்பேரில் 7.30 மணிக்கு மோப்பநாய் ரிக்கியை எடுத்துக்கொண்டு அந்த நாயின் பயிற்சியாளராக நானும், தலைமைக்காவலர் அருள்ராஜ்ம் காவல்துறை வாகனத்தில் புறப்பட்டு சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையக்குற்ற எண்.99/2017 வழக்கின் சம்பவ இடத்திற்கு காலை 8.50 மணிக்கு சென்று சம்பவ இடத்தில் கிடைத்த தடயங்களில் மோப்பநாய் ரிக்கி மோப்பம் பிடித்து சம்பவ இடம் மற்றும் வீடு முழுவதும் சுற்றிவந்தது. அதன்பிறகு மோப்பநாய் ரிக்கி வீட்டிற்கு வெளியே தெற்காக ஓடிச்சென்று திருப்பூர் குமரன் ரயில்வே

கிராஸிங்கை கடந்து ரயில்வேபீடர் ரோட்டை அடைந்து தெற்குபக்கம் உள்ள டாஸ்மாக் அருகில் சென்று மோப்பமிட்டது. அதன் பின்பு அங்கிருந்து மேற்காக ரிக்கி ஓடிசென்று ரயில்வேஸ்டேசன் அருகில் உள்ள இருசக்கரவாகனம் மற்றும் ஆட்டோ நிறுத்தும் இடம் சுற்றிலும் மோப்பமிட்டு ரிக்கி நின்றுவிட்டது. இது சம்பந்தமாக நானும், அருள்ராஜ் சேர்ந்து ஒரு அறிக்கை அளித்தோம். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை நேரடியாக விசாரித்தாரா அல்லது தொலைபேசி மூலமாக விசாரித்தாரா என்றால் தொலைபேசி மூலம் விசாரித்தார். நான் முதல்விசாரணையில் கூறிய மோப்பநாய் ரிக்கியின் செயல்பாடுகள் காணொளியாக படம் பிடிக்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் கூறியவாறு மோப்பநாய் ரிக்கியை பயன்படுத்தி சம்பவ இடத்தை ஆய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. மோப்பநாய் ரிக்கியை பயன்படுத்தி சம்பவ இடத்தை ஆய்வு செய்தது பற்றி தயாரிக்கப்பட்டதாக முதல்விசாரணையில் கூறியுள்ள அறிக்கை ஆய்வாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டதா என்றால் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி அறிக்கையை எனது மேலதிகாரியிடம் சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. அந்த அறிக்கை திருநெல்வேலி மாவட்ட துப்பறியும் மோப்பநாய் பிரிவு அலுவலகத்தில் இருக்குமா என்றால் இருக்கும்.

**மறுவிசாரணை இல்லை.**